உ

கடவுள் துணை.

சண்முககஜாவளி.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்பமுதலிவீதி, மதரூஸ். என். சி.

138

உ

. கடவுள் துணை.

சண்முகஜாவளி.

———(*)———

வெண்பா.

இங்கிலமெலாந்து திக்கு மிலைறவனருளா லுதித்த
தென்பழனிக்கிரிமேவும்தேசிகனே—பன்னுதற்கு
மும்மதமும்ஐங்கரமும் மூஷிகத்தோடேயருளும்
கம்பமதவாரணனே காப்பு.

வலசிதே இந்தசலம் யாலருராசாமி

யென்றவர்னமெட்டு.

க-இ-ம்-பரசு-ஏகதாளம்-பல்லவி.

சண்முகனே

அப்பாசிவ சண்முகனே
அய்யாசிவ சண்முகனே
சாமிசிவ சண்முகனே
சம்போசிவ சண்முகனே
நம்பினேனே சாமி (சண்)

அநுபல்லவி..

பொன்மயூர மேருங்கந்த
சாமி நேமி பூமி காமி (சண்)

சரணங்கள்.

அண்டர் துயர் தீர்த்தவனே
அன்னைவள்ளி நாயகனே
தொண்டர்மனங் கண்டவனே
துதிபணிகள் பூண்டவனே
அண்டுமெந்தன் ஓர்மொழிகேள்
ஆறுமுகமான சுவாமி (சண்)

இல்லா மிடியின்குறை
யாற்குரைப்பே னென்துரையே
பல்லார் துதிபழனி
பரனே யரன்மகனே
எல்லா மறிந்தவநீ
யேது வாது வெளியென் மீது (சண்)

துதிமுறையின் விதியறியேன்
துயருறைக்கும் வழியறியேன்
தநிவரிலே வினைவெறுப்பேன்
தாள்பணியுங் கதியறியேன்
நிதியளித்து காருமிந்த
நேர சார பாரந் தீர (சண்)

சந்த்ரஜாடை யோன்மகனே
சாமிவடி வேலவனே
இந்திரன் மகள்சுதனே
பென்கவலை தீர்குகனே
மந்த்ரமுனி வோர்பரவும்
மாமலை பழனிவளர் (சண்)
சிறுமணவூ ரென்னும்பதி
சிறுவன்முனி சாமிதுதி
ஆறுமுகனே உன்றருள்கதி
அன்றிவே றில்லைததி
பருவமிது கருணைவைத்துன்
பாதமலரைத் தருவாய் (சண்)

உ-அங்கேவரக்கூடாதையாசாமிநான் பென்றவர்னமெட்டு.

பல்லவி.

என்கவலைத்தீர்த்தருள்வாய்—சாமிநீ
என்கவலைதீர்த்தருள்வாய்

அநுபல்லவி.

பன்னுமறைதுதிக்கும் பழனிமாமலைவேலா என்

சரணங்கள்.

பாரில்யாரறிவார்கள் பாவியான்படுந்துயர்
ஆர்க்குரைப்பேன்செல்லால் அரிமருகனேசாமி(என்)

செனித்தநாள்முதலாயோர் சீரறியேன் சாமி
இனிதுயரருப்பாய் இதுதருணம்சாமி(என்)
சிறுமணவூர்வாழும் சிறுவன்யான் முனிசாமி
பெருமைபெற்றிடவரு ளறுமுகனேசாமி(என்)

ந-சாமிரேடே மந்துனே
என்றவர்னமெட்டு.

அப்பாநீமோடிசெய்தால்
எப்படிநான்சகிப்பேன்.

அநுபல்லவி.

இப்படியோர் போற்றும்போரூர் (அப்)

சரணங்கள்.

வையமிசையான் படுந்துயற்கென்
செய்குவேன்சாமி யாரையா
ஜெய்குவேன்சாமி யாரையா (அப்)

எத்தனைத்தான் முறையிடுவேன்
வெத்திசேர்வேலா அய்யனே
சத்தியின்பாலா (அப்)

பனிமலர் சிறுமணவூர்
முனிசாமிபோற்றும அய்யனே
யினிதுணைசாற்றும் (அப்)

ச-ஓரமணீமணிசாமினித்தியானே

யென்றவர்னமெட்டு.

இ-ம்-காம்போதி-சாப்புதாளம்.

பல்லவி.

ஓமயில்வாகனனே எனையாள்குகனே (ஓ)

அநுபல்லவி.

என்னையாள்குகனே இறையவன்மாமகனே (ஓ)

சரணங்கள்.

அசுரர்குலகாலா சுருதியின்மேலா
அரனருள்பாலா அடியேனையாளா (ஓ)
மலைமுருகேசா மரன்மகள்நேசா
கலைபுகழீசா கருணைப்ரகாசா (ஓ)
ஏனிந்தஜாலம் இதுநல்லகாலம்
நானெந்தநாளும் நம்பினேன் ஆளும் (ஓ)
செந்தமிழால்துதிசெய் முனிசாமி
சிந்தைநோய்தீர்ப்பாய் சிவகிரிசாமி (ஓ)

ரு-இ-ம்-மோகனகல்யாணி-தாளம்-சாபு.

பல்லவி.

என்னிடர்தீர்த்தருளையா ஐயா
இன்னமெனக்கார்துணை வீராறுகையா (எ)

அநுபல்லவி.

அன்னைவள்ளிதெய்வ யானைசமேதா
அசடையெனடுமையே லறுமுகநாதா

சரணங்கள்.

பிழைபொறுத்தாள யென்னைப்பெற்றநீதானே
பின்னையார்க்கென் குறை புகலுவேன்யானே-எ
கஷ்டம்தவிர்த்தென்மேல் கடைக்கண்பாரையா
காலுக்கடுமையென்று கழறுதல்பொய்யா-எ
கல்லோவுன்மனமின்னங் கரையாததேனோ-உன்
கபடத்தொழிலுக்கெதிர் காணேயான்றானோ
பூதலவாழ்க்கையை பிரபலமாய்ச்சாற்றி
புன்மனத்தாலுழலும் புத்தியைத்தேற்றி-எ
தொல்லையுரைத்து உன்னைத் தொழுமுனிசாமி
துயரறுப்பாய்பழனி துரைமுத்துசாமி-எ

சு-வலரநாபைசாலுராமோகமு-யென்றமெட்டு.

இ-ம்-காபி-மீசுரதாளம்-பல்லவி.

வேலவா நீசெய்தஜாலம் தகாது.

அநுபல்லவி.

நாலாமறைதிரு காலமும்
நாடிடுக் கதிர்வடி (வேல)

சரணங்கள்.

ஆருன்னைவிடகதி அரிந்தசேதியைபல
வாருசொல்லியுமனம் பாரையோகூர்வடி (வேல)

வருமையெனும்பெரும் வாரியைநீந்தவிச்
சிறுவனால்சகியாதுன் திருவருள்புரிகதிர் (வேல)
நிதமுனை துதிக்கும்சுகன் முனிசாமிக்கினின்
பதமன்றியிகத்தில் பாக்கியந்தாகதிர் (வேல)

ஏ-நாயைப்பிரேமலேகிஜாடாநாடேதெலிசனு

போபோருயென்றவர்ணமெட்டு.

பல்லவி.

என்மேற்கருணை இல்லாஜாடை
ஏனோதிருவருள் புரிபுரிசாமி (எ)

அநுபல்லவி.

உன்னைக்குரவர்தன் மருமகனென்றேனோ
உன்றமயன்பெரும் வயிரனென்றேனோ (எ)

சரணங்கள்.

அன்னையைக்கொடிய வள்ளிநீலியென்றேனோ
அப்பனைபாண்டியன் அடிமையென்றேனோ
நின்னகமெங்கும் மலைகளென்றேனோ
நெஞ்சமுமிதங்கா வஞ்சகனென்றே (ஏனோ)

சண்முகஜாவளி

முற்றிற்று.